

மார்ச் – 2025

(மடல் - 25) செய்தி – 3





# தூது

நற்செய்தி துணுக்குகள்

“சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்” [நீதிமொழிகள் 31:30].



25 Years 2000 2025

CSI Tamil Parish - Abu Dhabi

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 6 |
| Children's Corner | 10 |
| வேத வினாக்கள் | 21 |
| கோதுமை மணி | 24 |
| துணுக்குகள் | 26 |
| ஆலய பக்கம் | 28 |

**“ஆணென்றும் பெண்ணென்றுமில்லை, நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.” [கலாத்தியர் 3:28 (b)]**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். புதிய வருடத்தின் முதல் இரண்டு மாதங்களை நிறைவு செய்யக் கிருபை செய்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். நமது திருச்சபையின் பெண்கள் சிறப்பு ஆராதனையை இந்த மாதம் 7ஆம் தேதி கொண்டாட இருக்கிறோம். திருச்சபையின் பணிகளில் பெண்கள் ஐக்கிய சங்கம் ஆற்றி வருகின்ற மகத்தானப் பணிகளுக்காக ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். அதோடு இந்த மாதம் 14,15,16 ஆகிய நாட்களில் Convention & Retreat நடைபெற உள்ளது, ஜெபிப்போம். உற்சாகமாகப் பங்குபெறுவோம்.

இன்றைய சமுதாயத்தில் பெண்கள் இல்லாதத் துறையே இல்லை. அரசியல், பொருளாதாரம், அறிவியல், கலை, இலக்கியம், காவல், இராணுவம் இப்படி எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்கு இணையாகப் பெண்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி எல்லாத் துறைகளிலும் பெண்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு முக்கியத்தும் கொடுக்கும் பொழுது கிறிஸ்தவத் திருச்சபைகள் மட்டும் பெண்களுக்குச் சரியானப் பங்கைக் கொடுக்கத் தயங்குகின்றன. நாம் இன்னும் பழைமையில் ஊறிக் கொண்டிருக்கிறோமா? அல்லது திருச்சபையில் பெண்களின் பங்கை ஏற்றுக்கொள்ளும் பக்குவநிலையை நாம் இன்னும் அடையவில்லையா? அல்லது பெண்களைப் குறித்து திருமறை சொல்லும் கருத்துக்களை நாம் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறோமா? தெரியவில்லை. எது எப்படி இருந்தாலும், பெண்களுக்குத் திருச்சபையில் முக்கியத்துவம் கொடுப்பது காலத்தின் கட்டாயம்.

திருச்சபையின் வழிபாடுகள் என்றாலும் சரி, கன்வென்ஷன் கூட்டங்கள் என்றாலும் சரி, சுவிசேஷ ஊழியம் என்றாலும் சரி, திருச்சபையின் எல்லா நிகழ்வுகளிலும் பெண்கள் அதிக கவனம் செலுத்துகிறார்கள். ஒருவேளை திருச்சபையின் ஊழியத்தை ஆண்கள் செய்யத் தயங்கினால் அந்தப் பொறுப்பைக் கர்த்தர் பெண்களுக்குக் கொடுக்கத் தயாராகவே இருக்கிறார். ஏனெனில் கடவுளுக்கு முன்பாக அனைவரும் சமம்.

**படைப்பில் பெண்கள்:**

எல்லாவற்றையும் நேர்த்தியாகப் படைத்த இறைவன், மனிதனின் படைப்பில் மட்டும் முழுமையைக் காணவில்லை. எனவே **மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல. ஏற்றத் துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்று ஏவாளைப் படைக்கிறார்** (ஆதியாகமம் 2:18). இங்கு ஏற்றத் துணை (Helper) என்பதற்குப் பயன்படுத்தும் **எஸார்** (Ezer) என்கின்ற எபிரெய வார்த்தையும், **என் பிதாவாகிய தேவன் எனக்குத் துணைநின்று** (யாத்திராகமம் 18:3) [God of my father was my help] என்பதில் **துணை** என்பதற்குப் பயன்படுத்தியிருக்கின்ற **எஸார்** என்கின்ற வார்த்தையும் ஒன்றுபோல் உள்ளது. எனவே கடவுள் எப்படி மனிதனுக்கு எல்லாச் சூழலிலும் துணையாக இருந்து உதவி செய்கிறாரோ அதைப் போன்று கணவனுக்கு மனைவி எல்லாச் சூழலிலும் துணையாக இருக்கிறாள்.

கடவுளின் படைப்பின் திட்டப்படி, ஆட்சி செய்கின்ற அதிகாரத்தை ஆண், பெண் இரண்டு பேருக்குமே கொடுக்கிறார் (ஆதி 1:28). இரண்டு பேருமே கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர்கள் (ஆதி 1:27) என்பதினால் நீங்கள் (ஆண், பெண்) பூமியை நிரப்பிக் கீழ்ப்படுத்தி ஆண்டு கொள்ளுங்கள் என்று கர்த்தர் ஆசீர்வதிக்கிறார்.

**கிறிஸ்துவின் வாழ்வில் பெண்கள்**

பெண்களைக் குறைத்து மதிக்கின்ற காலத்தில் சர்வ வல்லமை படைத்த இறைவன் சாதாரண பெண்ணின் வயிற்றில் தோன்றுகிறார். உலகை மீட்கின்ற இரட்சகரை சுமக்கின்ற பாக்கியத்தை மரியாள் என்கின்ற கன்னிப் பெண் பெற்றுக் கொள்கிறாள். இது பெண்ணினத்துக்கே கிடைத்த மிகப் பெரும் பாக்கியம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, உயிர்த்த ஆண்டவர் முதன் முதலாக மகதலேனா மரியாள் என்கின்ற பெண்ணுக்குத்தான் தரிசனமாகிறார். இயேசு உயிரோடு எழுந்து விட்டார் என்கின்ற நற்செய்தியைச் சுமந்து சென்ற முதல் மிஷனெரியும் மகதலேனா மரியாள் என்கின்ற பெண்தான்.

**பவுலின் பார்வையில் பெண்கள்:**

பவுல் ரோமருக்கு எழுதும் பொழுது கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய (Deacon) பெபேயாளைக் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக் கேற்றபடி ஏற்றுக் கொள்ளுங்கள் என்கிறார். (ரோமர் 16:1) 16ஆம் அதிகாரம் முழுவதும் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். அதோடு கிறிஸ்துவுக்குள் ஆண், பெண் என்கின்ற வேறுபாடே இல்லை. அனைவரும் சமம் என்கிறார்(கலா.3:28).

திருச்சபையின் வழிபாடுகளிலும், வளர்ச்சியிலும் பெண்களின் பங்களிப்பு மிக அதிகம். எனவே அவர்களை உற்சாகப்படுத்துவது நமது கடமை. நமது மனதிலிருக்கிற பழமையான பாரம்பரியக் கருத்துக்களை உதறித்தள்ளிவிட்டுக் கிறிஸ்துவுக்குள் அனைவரும் சமம் என்கின்ற உணர்வோடு திருச்சபையின் ஆட்சியிலும், அதிகாரத்திலும் பெண்களுக்குப் பங்கு கொடுக்க முன் வர வேண்டும். ஒரு secular அரசு பெண்களுக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்று குரல் கொடுக்கும்பொழுது, ஏன் கிறிஸ்தவர்களாகிய நாம் ஆட்சியிலும், அதிகாரத்திலும் 50 சதவீதம் இடம் கொடுக்கக்கூடாது?. சிந்திப்போம் செயல்படுவோம். இறையரசை இணைந்துக் கட்டுவோம்.

கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக!

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
**Rev. Dr. A. Samuel**

**“சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்” [நீதிமொழிகள் 31:30].**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், காத்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்தக் காலங்கள் முழுவதும், ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும் நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

**சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்.** நீதிமொழிகள் 31:30

மார்ச் மாதம் 8ஆம் நாள், அனைத்துலகப் பெண்கள் தினமாக (International Women's Day) ஆண்டு தோறும் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. ஆண்டவர் பெண்களைப் படைத்து மனிதனுக்கு ஏற்றத் துணையாக ஏற்படுத்தியதற்காக ஆண்டவரை ஸ்தோத்தரிக்கவும். குறிப்பாகக் குடும்பத்திலும், சமுதாயத்திலும் திருச்சபையிலும் பெண்கள் ஆற்றிவருகின்ற மகத்தானப் பணிகளுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்தவும் அழைக்கப்படுகிறோம்.

**திருப்பணியில் பெண்கள்:**

முதல் நூற்றாண்டில் நற்செய்தி பரவுவதில் பெண்களின் பங்கு சிறப்பானது. இயேசு கிறிஸ்துவின் சீடர்களோடு பெண்களும் இயேசுவின் தாயாரும், சகோதர்களும் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். (அப். 1:14) மத்தியாவைத் தெரிந்தெடுப்பதிலும் பெண்களின் பங்கு இருந்தது. அப்போஸ்தலர்கள் மேல் வீட்டறையில் பரிசுத்த ஆவியானவரின் வருகைக்காகக் காத்திருந்தவர்களில் பெண்களும் இருந்தார்கள். அவர்கள் மீதும் பரிசுத்தாவியானவர் இறங்கினார். இயேசுவுக்கும் அவரது சீடர்களுக்கும் தங்கள் உடமைகளைக் கொண்டு பணிவிடை செய்யும் பெண்களும் இருந்தார்கள் (லூக்கா8:3). ஐரேப்பாவின் முதல் கனியாக லீதியாள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதோடு, திருப்பணிக்காகத் தங்கள் இல்லத்தையும் திறந்து கொடுத்தார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னோடு இணைந்து திருப்பணியாற்றிய பெண்கள் பலரை புகழ்கிறார் (ரோமர் 16:1-12). குறிப்பாக எயோதியாளும் சிந்திகேயாளும் சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள் என்கிறார் (பிலிப்பியர் 4:2,3).

**இயேசு கிறிஸ்துவின் வாழ்விலும் பணியிலும் பெண்கள்:**

இயேசுவின் வாழ்விலும் பணியிலும் பெண்களின் பங்களிப்பு முக்கியமானது. பெண்கள் மீதான அவரது கனிவும் மதிப்பும் கருணையும் இருந்ததோடு, சமத்து அணுகுமுறையும் காணப்பட்டது. சமாரியப் பெண்ணிடம் பொது இடத்தில் உரையாடுவதற்கு இயேசு தயங்கவில்லை. ஏனெனில் நற்செய்தி புற இன மக்களுக்கும் கொண்டுச் செல்லப்பட வேண்டும் என்பதால், யூதர்களால் வெறுக்கப்பட்ட மக்கள் என்றாலும் ஜீவத்தண்ணீரை அவள் உள்ளத்தில் உருவாக்கியதால், அவள் வழியாக முழு கிராமமே இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டது. பன்னிரண்டு ஆண்டுகளாக கடும் இரத்தப்போக்கால் அவதிப்பட்டப் பெண் ஓடி சென்று இயேசுவின் ஆடையைத் தொடுகிறாள். அந்த வினாடியே அவள் குணமடைகிறாள். இயேசு திரும்பி, அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். இதில் இயேசுவின் அன்பும் கருணையும் இரக்கமும் வெளிப்படுகிறது. அதோடு சட்டத்தின் தடையையும் உடைத்தெறிகிறார்(மத்தேயு 9:22).

இயேசுவின் வாழ்வில் மிக முக்கிய நிகழ்வு அவரின் உயிர்ப்பு. தாம் உயித்தெழுந்து முதன்முதலில் மகதலேனா மரியாள் என்ற பெண்ணுக்குக் காட்சியை தருகிறார். அவரது முதன்மைச் சீடர்கள் என்று கருதப்படும் பேதுருவுக்கு யோவானுக்கு கூட அவர் தமது முதல் தரிசனத்தைக் கொடுக்கவில்லை. தமது உயிர்த்தெழுதலை முதலில் காணும் வாய்ப்பைப் பெண்களுக்குத் தருவது மூலம் இயேசு பெண்களைக் கௌரவப்படுத்துவதோடு, முதல் உயிர்ப்பின் நற்செய்தியை உலகுக்கு அறிவிக்கும் பொறுப்பையும் பெண்களிடமே கொடுக்கிறார். உயிர்த்த இயேசு பெண்களை நோக்கி சீக்கிரமாய்ப் போய், இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கச் சொல்லுகிறார் (மத்தேயு 28:1-10).

நீதிமன்றத்தில் பெண்களின் சாட்சியை யூத சட்டம் ஏற்றுக் கொள்ளாது. பெண்களைப் பாகுபாட்டுடன் நடத்திய அதே யூத இனத்தில் தோன்றிய இயேசுகிறிஸ்து பெண்களை தேவசாட்சிகளாய் மாற்றி ஆணுக்கு இணையானவர்கள் என்று காட்டுகிறார். நாம் நமது தாயை, சகோதரியை, மனைவியை, சக பெண்களை எப்படி பார்க்கிறோம்? இதுவரை இதைக் குறித்து சிந்திக்காவிட்டால் இனி சிந்திக்கவும் செயல்படவும் ஒரு வாய்ப்பாகக் கருதுவோம். இறைவனின் பார்வையில் அனைவரும் சமமே.

கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக!

**மீட்பரின் பணியில்**
***திருமதி.ஜெபா சாமுவேல்***

## அன்னாளின் ஜெபம்

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள பெண்களில் அநேகர் நமக்கு முன்மாதிரிகளை வைத்து சென்றுள்ளனர். அவர்களில் ஒருவர்தான் அன்னாள். எல்க்கானா என்பவருக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். அவர்களில் ஒருவர் அன்னாள். மற்றொருவர் பெனின்னாள்.

**கனத்த உள்ளத்துடனுள்ள அன்னாள்**

எல்க்கானா குடும்பம் சீலோவிலே பலியிட செல்லும்போது, எல்க்கானா அன்னாளிடம் மிக அன்பாக நடந்து கொண்டபோதிலும், பெனின்னாள் அன்னாளை மிகவும் துக்கப்படுத்துவாள். தனக்கு பிள்ளைகள் இருந்து, அன்னாளுக்கு குழந்தை இல்லாத காரணத்தினால் பெனின்னாள் அன்னாளை சஞ்சலப்படுத்துவது வழக்கமாய் இருந்தது. கணவனால் தேற்றப்பட்டாலும், சாப்பிடாமல் அழுது கொண்டிருப்பாள் அன்னாள் (1சாமு.1:7).

**கர்த்தருடைய சந்நிதியை நாடிச் சென்ற அன்னாள்**

சீலோவிலே தங்கள் பலிகளை செலுத்திய பின் அன்னாள் கர்த்தருடைய சந்நிதியை



நோக்கி சென்றாள். அங்கு சென்று தன் இருதயத்தை ஊற்றி விட்டாள். தனக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால் அதை கர்த்தருக்கே ஒப்புக் கொடுத்து விடுவேன் என்று பொருத்தனை செய்து ஜெபித்தாள். அவள் உதடுகள் மாத்திரம் அசைந்தன. மனக்கிலேசமுள்ள அன்னாள் வெகுநேரம் கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினாள். பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய சந்நிதி வரை சென்ற பெண்மணி அன்னாள் மட்டுமே. பழைய ஏற்பாட்டில் கர்த்தரிடம் பொறுத்தனை செய்த பெண்மணியும் அன்னாள் மட்டுமே. தன்னை சந்தேகத்துடன் கேட்ட ஏலியிடம் தாழ்மையுடன் மிகவும் பொறுமையாக பதிலளித்தாள். கர்த்தருடன் நெருக்கமான உறவு வைத்திருந்தாள் அன்னாள். தன் நொறுங்குண்ட இருதயத்தை கர்த்தரிடம் ஊற்றிவிட்டாள்.

**சந்தோஷத்துடன் திரும்பி சென்ற அன்னாள்**

அன்னாள் என்றால் ‘கிருபையும் இரக்கமும் பெற்றவள்’ என்று பொருள். அன்னாளின் உண்மையான நிலையை புரிந்துகொண்ட ஏலி, “**சமாதானத்துடனே போ; நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்குக் கட்டளையிடுவாராக!**(1சாமு. 1:17) என்று சொல்லி அனுப்புகிறார். அதன் பின்பு அவள் போஜனம் செய்தாள். அதன் பின் அவள் துக்க முகமாயிருக்கவில்லை. ஏனெனில் தான் வேண்டிக்கொண்டதை கர்த்தர் கட்டாயம் அருளுவார் என்ற திடமான நம்பிக்கை அவளுக்கு இருந்தது.

**ஜெபத்திற்கு பதில் கண்ட அன்னாள்**

சிலநாள் சென்றபின்பு அன்னாள் கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெற்று, கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி, அவனுக்கு சாமுவேல் என்று பேரிட்டாள். அந்த வருடம் அன்னாளும் சாமுவேலும் சீலோவுக்கு செல்லவில்லை. அவள் அவனைப் பால் மறக்கப்பண்ணினபின்பு, மூன்று காளைகளையும், ஒரு மரக்கால் மாவையும், ஒரு துருத்தி திராட்சரசத்தையும் எடுத்துக்கொண்டு, அவனையும் கூட்டிக்கொண்டு, சீலோவிலிருக்கிற கர்த்தருடைய ஆலயத்துக்குப் போனாள்; பிள்ளை இன்னும் குழந்தையாயிருந்தது. அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன் என்றாள்; அவன் அங்கே கர்த்தரைப் பணிந்துகொண்டான். தான் செய்த பொருத்தனையின் படி தான் பெற்ற குழந்தையை ஆலயத்தில் விட்டுச் சென்றாள் அன்னாள். பொருத்தனை மிகவும் கடினமானதாக இருந்தாலும் அதை சந்தோஷத்துடன் நிறைவேற்றினாள். கர்த்தரை துதித்து போற்றினாள். ஒரு குமாரனைக் கொடுத்த அன்னாளுக்கு, கர்த்தர் மேலும் மூன்று குமாரரையும், இரண்டு குமாரத்திகளையும் கொடுத்தார். ஐந்து மடங்கு ஆசீர்வாதம்! ஆலயத்தில் விடப்பட்ட சாமுவேல் கர்த்தருடைய சத்தத்தை சிறுவயதிலேயே கேட்கும் ஆசீர்வாதத்தை பெற்றான். பிற்காலத்தில் ஒரு பெரிய தீர்க்கதரிசியாக மாறியதும் நாம் அறிந்ததே.



**நம் சிந்தனைக்கு:**

- ? நம் வாழ்வில் நம்மை காட்டிலும் கீழான நிலைமையில் உள்ளோரைக் காணும்போது பெனின்னாளை போல எள்ளி நகையாடுகிறோமா?
- ? நமக்கு கஷ்டங்கள் வரும்போது புலம்புகிறோமா, மனிதனின் உதவியை நாடி ஓடுகிறோமா அல்லது அன்னாளைப் போல கர்த்தருடைய சந்நிதியை தேடி ஓடி, அவரிடம் நம் இருதயத்தை ஊற்றுகிறோமா?
- ? நம்மை தவறுதலாக மற்றவர் புரிந்து கொள்ளும்போது, ஏலியிடம் பணிவுடன் பதிலுரைத்த அன்னாளைப் போல பொறுமையுடன் பதில் சொல்கிறோமா அல்லது கோபப்படுகிறோமா?
- ? எல்லா சூழலிலும் கர்த்தரை மாத்திரம் சார்ந்து தாழ்மையுடன் வாழ்கிறோமா?
- ? கர்த்தரின் சந்நிதியில் நாம் எடுக்கும் தீர்மானங்களில், பொருத்தனையை நிறைவேற்றிய அன்னாளைப் போல உறுதியாய் இருக்கிறோமா?

நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். அன்னாளை போல ஒரு முன்மாதிரியான ஜீவியம் செய்ய கர்த்தர் தயை புரிவாராக.

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

பெண்கள், வீட்டிலும், சமுதாயத்திலும், திருச்சபைகளிலும், திருமறையிலும் மிகவும் முக்கியமானவர்கள். எல்லா வருடமும் உலகம் முழுவதும், பெண்கள் தினம் கொண்டாடப்படுகிறது. நாம் யார் என்ற கேள்வி எழுப்பும்போது வேதாகமம் நம்மை சித்திரம் தீர்த்த மூலைக்கல், குணசாலி, பாக்கியவதி, வியாபாரக்கப்பல், கனிதரும் திராட்சக் கொடி என்றெல்லாம் சொல்லியிருப்பதைப் பார்க்க முடிகிறது.

சங். 144:12-ல் குமாரத்திகள் சித்திரந்தீர்த்த அரண்மனை மூலைக்கற்கள் என்று பார்க்கிறோம். பெண் பிள்ளைகள் மென்மையானவர்கள். வீட்டை அலங்கரிப்பவர்கள். வெளியில் மென்மையானவர்கள். ஆனால் கல்போன்ற உறுதியான மனதை உடையவர்கள். அன்னாளைப் பார்க்கும்போது அவள் ஜெபத்தில் உறுதியாய் இருந்தாள். சாராள், கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை நம்புவதில் உறுதியாய் இருந்தாள். எலிசபெத் கடவுளின் கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொள்வதில் உறுதியாயிருந்தாள். இயேசுவின் தாய் மரியாள் வேத வசனங்களை விசுவாசிப்பதில் உறுதியாய் இருந்தாள்.

பெண் குழந்தைகள் வளர்ந்து ஆளாகிக் குடும்பத்தைக் கட்டுகிற புத்தியுள்ள ஸ்திரீயாக காணப்படுகிறார்கள். நீதி. 14:1-ல் புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் என்று பார்க்கிறோம். ஒரு வீடு கட்டப்பட கற்கள் மிகவும் அவசியம். ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்கள் சுமை தாங்கி கற்களாகக் காணப்படுகிறார்கள். அநேக சுமைகள். உதாரணமாக வேலைப்பளு, வேலைக்கு செல்லுமிடத்தில் வேலைப்பளு, கடன்பாரம், பிள்ளைகளைக் குறித்த, பெற்றோர்களைக் குறித்த பாரம், இன்னும் அநேகம் உண்டு. ஆனால் சுமைகள் என்னும் பொறுப்புகளை சுகமான சுமைகளாக ஏற்றுக்கொள்கிறோம்.

குணசாலி என்ற வார்த்தை பல நற்குணங்களை உள்ளடக்கியது. இது பெண்களுக்கு மட்டுமல்லாது ஆண்களுக்கும் பொருந்தும். பொதுவாக பெண்கள் என்றாலே அழகு, ஆடை, அணிகலன்கள், அலங்காரம், அந்தஸ்து என வெளிப்படையான தோற்றங்களே நம் கண்முன் வரும். ஆனால் உதாரணமாக நகோமி, ரூத்துடைய வெளித்தோற்றம் நமக்கு காட்டப்படவில்லை. அவர்களின் குணநலன்களையும், அவர்கள் வாழ்வில் இழந்துபோன நிலைமைகளையும், ஏழ்மையையும், அவர்களின் வாழ்வுக்கு உயிர் கொடுத்த போவாசின் அன்பு, அரவணைப்பு, பாதுகாப்புகளையும் பார்க்கிறோம். இங்கு துணிவு, பணிவு, கனிவு என்ற மூன்ற குணநலன்கள் அவர்களை குணசாலியாக காண்பிக்கிறது.

**பாக்கியவதி (நீதி.31:28):**

பாக்கியம் என்பது எல்லோருக்கும் கிடைக்காத அரிதான ஆசீர்வாதத்தைக் குறிக்கின்றது. ஆசீர்வதிக்கப்பட்ட நிலைமையில் வாழும் பெண் பாக்கியவதி. ஒரு பெண் செல்வம், செல்வாக்கு, அந்தஸ்து, அழகு, வெற்றி, இன்பம் ஆகியவற்றை பெற்றிருந்தால் அவளை பாக்கியம் பெற்றவள், கொடுத்து வைத்தவள் என்கிறோம். அது மாத்திரமல்ல. பிள்ளைகள் எழும்பி அவளை பாக்கியவதி என்று சொல்ல வேண்டும். தாயின் குணம் இதில் வெளிப்பட வேண்டும். லேயாள், இயேசுவின் தாய் மரியாள், பாக்கியவதி என்ற அந்தஸ்தைப் பெற்றனர். தன் கணவரால் நேசிக்கப்படாத போதும், கடவுளின் கிருபையைப் பெற்ற லேயாள் தன்னை பாக்கியவதி என்று சொல்லிக் கொள்கிறாள்.

இயேசுவின் தாய், உலகில் திருமைந்தன் தோன்ற பாத்திரமாக தெரிந்து கொண்டார் என்று உணர்ந்து பாக்கியவதி என்று சொன்னாள். இங்கு கடவுளின் இரக்கம், விசுவாசம், தாழ்மை போன்ற குணங்கள் தான் பாக்கியமாக கருதப்படுகிறது.

**கனிதரும் திராட்சக் கொடி (சங்.128:3):**

“மலர் கொடியாள்” என வருணிக்கப்படும் பெண் திருமறையில் கனிதரும் திராட்சக்கொடியாக சொல்லப்பட்டிருக்கிறாள். ஒரு பெண், குடும்பத்தலைவி, ஒரு குடும்பம் உருவாக காரணமானவள். நானே திராட்சச் செடி (யோவான்15:5). நீங்கள் கொடிகள். கொடி திராட்ச செடியுடன் இணைந்திருக்க வேண்டும். கொடியாகிய பெண் கிறிஸ்து இயேசுவாகிய செடியில் நிலைத்திருக்கும்போது மட்டுமே மிகுந்த கனி நிறைந்த வாழ்வை தம் இல்லத்திலும், சமூகத்திலும், சபைகளிலும் பகிர்ந்தளிக்க முடியும். அப்பொழுது இயேசுவின் நாமம் மகிமைப்படும்.

பெண்களாகிய நாம் சித்திரம் தீர்த்த மூலைக்கல்லாகவும், குணசாலிகளாகவும், பாக்கியவதிகளாகவும், கனிதரும் திராட்சைக் கொடியாகவும் இருந்து நம்முடைய குணநலன்களால் ஆண்டவர் நாமம் மகிமைப்பட வாழ்வோம்!

**ஷர்மிளா ராஜேஷ்**

Dear Children,

The theme this March is "**WOMEN**".



This month, we reflect on the acts of courage and determination by ordinary women who play an extraordinary role everyday. We have many examples from the Bible.

Girls today fight a daily battle to be media-worthy. Smooth-talking YouTube and TikTok stars set the standard, and most girls can't begin to keep up with them.

## LESSONS FROM THE BIBLE




1. **Society doesn't determine your worth.** God sees you as His beautiful creation – E.g. The Samaritan woman at the well
2. **You were created for a purpose.** God has a future planned, with far-reaching implications, if you are willing to trust him – E.g. Mary, mother of Jesu.
3. **Don't be afraid to persist in prayer.** Don't confuse your bold petitions with nagging. You can't wear out Jesus, so ask away – E.g. Hannah
4. **You aren't called to juggle everything.** As a daughter of the Most High, you are invited to leave the whole world in His hands where it belongs. Your place is at the feet of our Savior – E.g. Mary (Martha's sister)
5. **You are worthy of His Grace.** Women, made in God's image, remain a pivotal and precious part of Jesus' plan. You're human. And Jesus loves you. E.g. Eve.



## SAYING IT WITH PICTURES...




Here I am! I stand at the door and knock. If anyone hears my voice and opens the door, I will come in and eat with that person, and they with me. — Revelation 3:20 NIV




You show that you are a letter from Christ, the result of our ministry, written not with ink but with the Spirit of the living God, not on tablets of stone but on tablets of human hearts. — 2 Corinthians 3:3 NIV

## NAMES OF GOD #3 EL ROI- THE GOD WHO SEES




El Roi was first revealed in the Bible by Hagar.

She was Sarah's handmaiden, who became pregnant with Abraham's child so, in their minds, they could fulfill the promise of God.

Soon after the child was conceived, things became very difficult between Sarah and her. So much so, that Hagar fled out into the wilderness.

Friendless, homeless, pregnant, not knowing what would become of her, she laid down by a fountain in the wilderness. There, an angel appeared to her to give her comfort and to speak of God's grace and mercy.




Genesis 16:13 says: "Then she called the name of the Lord who spoke to her, You-Are-the-God-Who-Sees; for she said, 'Have I also here seen Him who sees me?'"

**Daily Application** – Did you know that God sees you right now? God knows your very thoughts.

His eye is on the sparrow and I know He watches me.

## TINY TOTS SECTION

### COLOR IN...



# STORIES FROM THE BIBLE...

## A Young Girl and a Sick Woman


A man asked Jesus to heal his daughter.


Connect the dots:
1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15



On the way, a sick woman touched Jesus' clothing and was healed!


Circle the hidden objects in the picture below.




A servant came and told the man his daughter had died, but Jesus went anyway.

Help Jesus get to the man's house.



Jesus took the girl's hand and she was alive again!

Circle 5 differences in the 2nd picture.





# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "WOMEN OF BRAVERY AND COURAGE"

1. Which woman hid the Israelite spies in Jericho and helped them escape?

a. Ruth
b. Rahab
c. Deborah
d. Esther

2. Who risked her life by approaching the king uninvited to save her people?

a. Ruth
b. Rahab
c. Deborah
d. Esther

3. Who defied Pharaoh's order and hid her baby son, in a basket on the Nile?

a. Hannah
b. Jochebed
c. Miriam
d. Zipporah

4. Who showed loyalty by choosing to stay with her mother-in-law Naomi?

a. Orpah
b. Ruth
c. Rachel
d. Tamer

5. Which woman confronted King David, preventing bloodshed? (1 Sam. 25:23)

a. Abigail
b. Bathsheba
c. Deborah
d. Jael

6. Which prophetess led her people in a song of victory after crossing the Red Sea?

a. Hannah
b. Jochebed
c. Miriam
d. Zipporah

7. Who drove a tent peg through Sisera's head, bringing victory for Israel? (Jdg. 4:21)

a. Abigail
b. Bathsheba
c. Deborah
d. Jael

8. Who sat at Jesus' feet to learn from Him, despite criticism?

a. Mary
b. Martha
c. Joanna
d. Elizabeth

9. She used her money to help Jesus and his followers. (Luke 8:3)

a. Julia
b. Milcah
c. Joanna
d. Phoebe

10. Who had a business selling purple cloth? (Acts 16:14)

a. Tabitha
b. Dorcas
c. Lydia
d. Priscilla

11. Who was Timothy's grandmother, commented for her faith? (2 Tim. 1:5)

a. Lois
b. Eunice
c. Candace
d. Bernice

12. How many books in the bible are named after women?

a. One
b. Two
c. Three
d. Four

# HOW WELL DO YOU KNOW THEM...?



## Bible Quiz

### Women of the Bible

Match the question with the answer on the right.

_____What relationship was Ruth to Naomi?
_____Who was Jacob's mother?
_____Who did Abram marry?
_____What was the name of Moses' sister?
_____Which woman was a seller of purple goods?
_____With whom did David commit adultery?
_____What was the name of Ahasuerus' new queen?
_____What was the name of Yeshua's (Jesus) mother?
_____What did Ruth do to Boaz while he was sleeping?
_____Which female judge described herself as 'a mother in Israel'?
_____Who did Yeshua appear to first after His resurrection?

1. Deborah
2. Mary
3. Miriam
4. Sarai
5. Daughter-in-law
6. Esther
7. Bathsheba
8. Rebekah
9. Lydia
10. Mary Magdalene
11. Uncovered his feet and lay down next to him





## Mothers in the Bible

Match the question with the answer on the right.


### Questions

_____ Who was Jacob's mother?
_____ Who was the mother of Isaac?
_____ Who was the mother of Joseph and Benjamin?
_____ Which mother in the Bible had a set of twins?
_____ Who was John the Baptist's mother?
_____ Who was the first mother mentioned in the Bible?
_____ What was the name of Yeshua's mother?
_____ Which female judge said she was "a mother in Israel"?
_____ Who was the mother of King Solomon?
_____ Whose mother placed him in a basket made from bulrushes?
_____ What relationship was Naomi to Ruth?

### Answers

1. Sarai (Sarah)
2. Mary
3. Elizabeth
4. Deborah (Judges 5:7)
5. Eve
6. Rebekah
7. Rebekah
8. Moses
9. Rachel
10. Bathsheba
11. Mother-in-law

# THE LENTEN SEASON




Lent is the time of year when Christians prepare for Easter.

Lent begins on Ash Wednesday. Ashes are placed on the forehead by a priest, usually in the shape of a cross, as a symbol acknowledging sin.


It lasts for 40 days, not counting Sundays, and ends the day before Easter.




During Lent, many Christians fast. They do this in memory of Jesus Christ, who fasted for 40 days in the wilderness. Christians also spend time in prayer, give money to charities, and give up some of the things they might otherwise do for pleasure.


Lent is an important period of reflection, growth, and new beginnings in the Christian calendar.

Traditionally, the colour of Lent is purple. It solemnly reminds us of the pain and sacrifice of Jesus's death, and the joy in his royalty and resurrection.



# THE LENTEN SEASON IS A SEASON OF PREPARATION

## LET US STRIVE TO BE MORE LIKE JESUS




Jesus showed kindness in lots of ways. Read the scriptures to learn about some of the ways Jesus was kind. Then fill in the blanks.



- **John 11:32-35, 43-44**
  Jesus cried with M A R Y when her brother died. Jesus knew He could raise her brother from the dead, but He was still sad with her.
- **Mark 10:46-52**
  Even though Jesus was busy, He took time to help a blind man named _ _ _ _ _ _ _ _ _ _ _ .
- **John 19:25-27**
  When Jesus was on the cross, He asked His disciple to take care of His _ _ _ _ _ _ _ .



- **John 8:3-11**
  Some people were judging a _ _ _ _ _ _ who sinned, but Jesus did not get angry. He helped her.
- **Luke 18:15-16**
  Jesus was patient and spent time with little _ _ _ _ _ _ _ _ _ .



# LESSONS FROM AMY CARMICHAEL



As a little girl, Amy wanted blue eyes more than anything in the world!

Her mother had always taught her that God answers prayer; so, every night before bedtime, Amy would ask God to change her eye color from brown to blue. Every morning, though, her eyes were still brown.


As a child, Amy Carmichael had no idea what God was planning to do with her life. When an evangelist pointed out her need to give her whole life to Christ, Amy did.



Eventually, she moved to the country of India. There, she finally understood why God created her with brown eyes.

As she tried to help young girls escape from temple slavery, the kind of work she did required her to appear to others like an Indian woman.

If she had been born with blue eyes, there would be no way anyone would believe she was really from India. All the women of India had brown eyes!




Later, Amy opened an orphanage and founded a mission in Dohnavur. She served in India for 55 years and wrote 35 books about her work as a missionary.

**Food for Thought**: When God says "no" or "wait" in answer to your prayers, do you trust Him or argue with Him? Are you content with how He's made you and where He's put you?

**Psalm 139:14** – I will praise You, for I am fearfully and wonderfully made; marvelous are Your works, and that my soul knows very well.

# MISSIONARY JOURNEY

## APOSTLE # 3 JAMES



When Jesus called James to follow Him, he was in a boat mending a fishing net.

James was one of Jesus' "inner circle." James, John, and Peter are frequently mentioned together as the only apostles to witness some of Jesus' miracles: the raising of a young girl from the dead (Mark 5), for example.

James and his brother, John, were called "sons of thunder" (Mark 3:17). After the ascension of Christ, James was present on the Day of Pentecost (Acts 2) and did his part in fulfilling the Great Commission.

As Jesus had predicted, James experienced persecution soon after the church began. According to tradition, James traveled to Spain to preach the gospel before returning to Judaea and dying a martyr.

James became the first apostle to be martyred in AD 44 at King Herod's hands.




## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

1. The theme for the month of March is: ______________.
2. EL - ROI means "______________________________."
3. Ps. 139:14 says - ____________________________________ ________________________________________________________________________.
4. ________________________ was one of Jesus' "inner circle", with Peter and John.
5. The Lenten season begins on ___________________________ and ends the day before ______________________.
6. Amy opened an ____________________and founded a ___________in _________________. She served in India for _____ years and wrote ______ books.

God bless,
Mrs. Briliya Jeyaseelan.

# Answers to February Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – A Blessed Life

1. b. Psalm 1
2. b. They will inherit the Earth.
3. c. Wealth, without sorrow
4. b. Transgressions are forgiven.
5. b. The Lord Bless you and keep you
6. b. The one who trusts in the Lord
7. c. They are Blessed.
8. b. Hear the voice of God & Obey it
9. b. Those who do his commands.
10. a. Those whose ways are blameless
11. b. Make them abound in good work
12. b. Blessed

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

1. The theme for the month of February is: **A BLESSED LIFE.**
2. JEHOVAH-ROHI means " **The Lord Is My Shepherd**."
3. Romans 4:7 – 8 says - **Blessed is the man against whom the Lord will not count his sin**
4. **Andrew** was the first to bring another person to Jesus.
5. When Jesus fed the 5000, **Andrew** found the boy with the 5 loaves and 2 fishes.

***Note : Submit the hard copy of the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***



# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

**(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)**

? **வேதாகமத்தில் இடம்பெற்றிருக்கிற 50 பெண்களின் பெயர்களை இருப்பிடத்துடன் 25 ம் தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்புங்கள்.**

♥ வேதாகமத்தில் இடம்பெற்றிருக்கிற பெண்களின் பெயர்களில் அதிகப்படியான பெண்களின் பெயர்களை இருப்பிடத்துடன் எழுதுபவருக்குப் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பாகச் மூன்று சிறப்பு பரிசுகள் உண்டு.(ஒரு பெயர் ஒருமுறை மட்டுமே எழுதவேண்டும்)

**ஏப்ரல் மாத தலைப்பு**

## உயிர்த்தெழுந்த இயேசு

# *Risen Jesus*

## பிப்ரவரி மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் வேதாகமம் முழுவதும் |
|---|---|---|
| 1 | மரேசா | 2 நாளா. 14:9 |
| 2 | ஆமாத்சோபா. | 2 நாளா. 8:3 |
| 3 | கேசேர் | 1 நாளா. 20:4 |
| 4 | யாகாஸ் | நியா. 11:19-22 |
| 5 | ஆர்லோத் மேடு | யோசுவா 5:2,3 |
| 6 | எருசலேம் | 2 நாளா. 24:1 |
| 7 | ஆலோசனைச் சங்கத்தில் | அப். 6:15 |
| 8 | கப்பர்நகூமிலுள்ள ஜெபஆலயம் | யோவான் 6:59,60 |
| 9 | பரிசேயன் வீடு | லூக்கா 7:37,38 & யோவான் 11:2 |
| 10 | துரோவா | அப். 16:8,9 |

குறிப்பு : *அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் எழுதிய விடைத்தாள்களை ஒப்படைக்கவும்.*

## பிப்ரவரி மாத வேத வினாக்களுக்கு பதில் அளித்தவர்கள்

1. Mrs. Abisha Grace Rejin
2. Mrs. Ajita Ebi
3. Mrs.Annie Rosita
4. Mrs.Blessy Lipny
5. Mrs.Desigta Jaison
6. Mr.Emmanuel
7. Mrs.Esther Pauline Rani
8. Mrs.Febell Jeevagi Thomas
9. Mrs.Geetha kannan
10. Mrs.Grace shekar
11. Mrs.Helen Sharmila Ray
12. Mr.Jeba Jino
13. Mrs.Jasmine Sobha
14. Mrs.Jebaseeli Asir
15. Mrs.Jenila Gannraj.L
16. Mrs.Kishi Maher
17. Mrs.Manuel Sarah
18. Mrs.Praveena Arun
19. Mrs.Nandhini Rajkumar
20. Mr.Prawin Durai Sam
21. Mrs.Priya Ranjith Kumar
22. Mrs.Persis John
23. Mr.Salin Robert
24. Mrs.Sheeba Merlin
25. Mrs.Sheeba Herlin
26. Mrs.Sheneegah Stanly
27. Mrs.Sharmila Rajesh
28. Mr.Selva Shaji
29. Mrs.Subi Kishore
30. Mrs. Subija Jino
31. Mrs.Sweetilin Frank
32. Mrs. shobana Milton
33. Mrs.Peppin Jenson
34. Mrs.Valentine Sharmila Paul
35. Mrs. Suni Smila Edwin
36. Mrs. Malar Ernast
37. Mrs. Shajeethe Graly
38. Mrs. Vithya Dinesh
39. Mrs. Jini Jose
40. Mrs.Selvi George
41. Mr.Raja Guru
42. Mr.Jo Ernast
43. Mr.Miehael

## Children who answered February – 2025 Quiz

1. Aadhav Steve Matthew
2. Aaran
3. Adelyn Victoria Jeyaseelan
4. Brightson Timothy Raj
5. Benson Immanuel Raj
6. Camryn Robert.S
7. Clement Dave
8. Daniel Vanya (RUWAIS)
9. Danion Lemuel
10. Debi Lovisha
11. Evelyn Gracia
12. Evelyn Loria V
13. Gabrilyn Hannah
14. Galvin Robert.S
15. Giana Elin
16. Hadriel Adventier
17. Janey Titus
18. Jarick Aaron
19. Jaslin Shanna
20. Jaylan Paul Jino
21. Joanna Paul Jino
22. Johanan Paul Jino
23. Jerilyn Pushpam Nelson
24. Jevlyn Ana
25. Jeya Jehosheba Maher
26. Jeya Joshua Maher
27. Jim Scott
28. Jen Scudd
29. Jeffrey Samuel
30. Jenessa Johnson
31. Joel Abrakam
32. Joha Anit Manuel
33. Johan Sam Manuel
34. Kathryn Joan
35. Kev Shannen P.S
36. Liana Erin
37. Leona Juliet
38. Leonel I.J. Stalin
39. Linuel I.J. Sherwyn
40. Nijolin Jose
41. Rivqah Deby Rajkumar
42. Sam Jesvin Vincent
43. Starlyne Noble
44. Steffi Priscilla .R
45. Yedidiah Arun (Ruwais)
46. Yovaan jairus (Ruwais)
47. Evanlya Sherin
48. Jabree Aaron
49. Eion Jayden
50. Diuas Dinesh
51. Defina
52. EricJayden Seniors
53. Janessa Max
54. Jerilyn Pushpam
55. Jenilin Jose
56. Evangelia Sharo
57. Efrona
58. Darion Lemuel
59. Jessica Eban
60. Kavin Immanel
61. Kavi yalini
62. Sherlyn Sana



# இயேசுவின் சீடர் தோமா

***இந்தியாவின் அப்போஸ்தலர்***

**துண்டிக்கப்பட்ட கை, இணைந்த அற்புதம்**

தோமாவை கன்னத்தில் அறைந்த மனிதனுக்கு எதிர்ப்பட்ட சிங்கம், அவனது இடது கையை துண்டாகக் கடித்து கொண்டு போய் விட்டது.

இரத்தம் சொட்ட சொட்ட, அவன் அந்தத் திருமண விருந்து அறைக்குள் நுழைந்தான். அதைப் பார்த்த யாவரும், "தோமாவை அடித்ததினால் தான் அவனுக்கு இப்படி நடந்திருக்கிறது!" என்று எண்ணி, தோமாவை மிகுந்த பயத்தோடும், மரியாதையோடும் நோக்கிப் பார்த்தனர்.

கையை இழந்தவனும், அங்கிருந்த அனைவரும் தோமாவிடம் மன்னிப்புக் கேட்டனர். அப்பொழுது திடீரென்று ஒரு நாய் அவனுடைய துண்டிக்கப்பட்ட கையை தன் வாயில் கவ்வியபடி அங்கு வந்து நின்றது! தோமா அந்தக் கையை எடுத்து, கை துண்டிக்கப்பட்ட பகுதியில் வைத்தபோது அந்தக் கை மிக அற்புதமாக இணைந்தது!

அந்த சம்பவத்தைப் பார்த்த அனைவரும், "இவர் கடவுளா? அல்லது கடவுளால் அனுப்பப்பட்டவரா?" என்று சொல்லி, ஒருவரோடொருவர் மிகுந்த ஆச்சரியத்தோடு பேசிக் கொண்டார்கள்.

**இயேசுவை ஏற்றுக்கொண்ட அரசன்**

நடந்த சம்பவத்தைக் கேள்விபட்ட அரசன் தோமாவை அழைத்து, புது மணத் தம்பதியருக்காக ஜெபிக்கும்படியாக கேட்டுக் கொண்டபடியினால் தோமா அவர்களை ஆசீர்வதித்து ஜெபித்தார். அன்றிரவு புது மணத் தம்பதியருக்கு, கர்த்தர் தமது மகிமையான தரிசனத்தை அளித்து, அவர்களை ஆசீர்வதித்தார்! அதன் நிமித்தமாக அந்தப் புது மணத் தம்பதியரும், அந்த தரிசனத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட அரசனும், இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர்.

**பாகிஸ்தான் ஊழியங்கள்**
**தட்சசீலம் பட்டணம்**

அலெக்சாந்திரியா துறைமுகத்திலிருந்து அப்பனேயுவுடன் மீண்டும் கப்பல் ஏறிய தோமா, அன்றைய இந்தியாவின் 'சிந்து'ப் பகுதியான பாகிஸ்தானின் துறைமுகம் ஒன்றில் வந்து இறங்கினார். பின்பு அவர்கள் இருவரும் அங்கிருந்து தரை மார்க்கமாக பயணித்து, 'தட்சசீலம்'(Taxila) என்கிற ஒரு பட்டணத்திற்கு வந்து சேர்ந்தனர்.

'காந்தாரா'அரசின் தலை நகராக விளங்கிய இந்தப் பட்டணம், இன்றைய பாகிஸ்தானின் தலை நகரான இஸ்லாமாபாத்திலிருந்து சுமார் 20 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இந்தப் பட்டணம், 'மொஹஞ்சதாரோ' மற்றும் 'ஹரப்பா' போன்ற பகுதிகளுக்கு அருகில் கி.மு.518-லிருந்து, கி.பி.600 வரை புழக்கத்திலிருந்தது. அன்றைய தட்சசீலம் பட்டணத்தின் சில இடிபாடுகளை இன்றைக்கும் நாம் அங்கே காணலாம்.

தோமாவின் காலத்தில் தட்சசீலம் பட்டணத்தில், உலகளவில் மிகப் பெரிய ஒரு பல்கலைக் கழகமே இயங்கி வந்திருக்கிறது! இங்கு மொழி, மருத்துவம், தத்துவம், இலக்கியம், அறிவியல் போன்றவை கற்பிக்கப்பட்டன. கி.மு.515-ம் ஆண்டு, யூதர்கள் இப்பட்டணத்தில் குடியேற ஆரம்பித்தனர். தரியு, மகா அலெக்ஸாண்டர், சந்திரகுப்தர், அசோகர் போன்ற மன்னர்களும் தங்கள் காலத்தில் இப்பட்டணத்தின் மீது படையெடுத்து, ஜெயித்து, தங்கள் ஆளுகையின் கீழ் வைத்திருந்தனர்.

'தட்சசீலா' என்ற சமஸ்கிருத வார்த்தைக்கு, 'தெற்கே உள்ள பாறை!' என்று அர்த்தம். சீனர்கள் இதை 'சுசாசிலோ' என்று அழைக்கின்றனர். கிரேக்கர்கள், 'தட்சசீல நகரமே இப்பகுதியில் மிகப்ப பெரிய நகர்!' என்று பதிவு செய்துள்ளனர்.

**'கொந்தபோரஸ்' அரசன்**

"'கொந்தபோரஸ்' என்கிற அரசன், கி.பி. 20 முதல், கி.பி.50 வரை இந்தியாவின் சிந்துப் பகுதியை உள்ளடக்கிய, 'பார்த்தியா' என்கிற தேசத்தை ஆட்சி செய்தான்" என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். கி.பி.1857-ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்ட 'தந்தி-பாகி' கல் வெட்டுகளிலும், அக்காலத்து நாணயங்களிலும் கூட இந்த அரசனின் பெயர் குறிக்கப்பட்டு இருக்கிறது. 'காபூல்' என்கிற இடத்திலும், தென் மேற்குப் பஞ்சாபிலுள்ள ஒரு பகுதியிலும் இந்த அரசனின் பெயரைத் தாங்கிய பல நாணயங்கள் கண்டு எடுக்கப்பட்டுள்ளன.

**அரசனிடமிருந்த வந்த கோரிக்கை**

அப்பனேயு, தோமாவை கொந்தபோரஸ் அரசனிடம் அழைத்துச் சென்று, "மன்னா, தாங்கள் கேட்டுக் கொண்டபடியே, தச்சராகவும், கட்டிடக் கலை வல்லுனராகவும் திகழ்கிற இவரை அழைத்து வந்திருக்கிறேன்" என கூறினான். அப்போது அந்த அரசன் தனக்காக ஒரு பிரம்மாண்டமான அரண்மனையை கட்டுவதற்கான மிகச் சிறந்த திட்டங்களை வகுத்து தருமாறு தோமாவிடம் கேட்டுக் கொண்டான்.

- **தொடரும்**

# துணுக்குகள்

## பாடல் பிறந்த கதை



**எருசலேம் என் ஆலயம் - [பாமாலை 400]**
**(Jerusalem my happy home)**

1. எருசலேம் என் ஆலயம்,
ஆசித்த வீடதே
நான் அதைக் கண்டு பாக்கியம்
அடையவேண்டுமே.

2. பொற்றளம் போட்ட வீதியில்
எப்போதுலாவுவேன்?
பளிங்காய்த் தோன்றும் ஸ்தலத்தில்
எப்போது பணிவேன்?

நியூ இங்கிலாந்தில் பல ஆண்டுகளுக்கு முன், ஒரு தாய் தன் ஒரே பாலகனைத் தூங்கவைக்கும் தாலாட்டுப் பாடலாக இதைப் பாடி வந்தாள். வேதனைகளும் பாடுகளும் நிறைந்த அவள் வாழ்க்கையின் ஒவ்வொரு நாள் முடிவிலும் இப்பாடலைப் பாடி, மன அமைதியையும் இளைப்பாறுதலையும் பெறுவது அவளுடைய வழக்கமாய் இருந்தது. அவளுடைய மகன் பெரியவனாகி, தினமும் அந்தி சாயும் நேரத்தில் மாடுகளை ஓட்டிகொண்டு வீடு திரும்பும்போது, வீட்டிலிருந்து அவன் தாய் பாடும் இப்பாடலின் சத்தம் அவனை வரவேற்கும்.

நாளடைவில் அவன் தாய் வியாதிப்பட்டு பெலவீனமடைந்தபோதும் இப்பாடலை மெல்லிய குரலில் அவள் பாட, அவன் கேட்பதுண்டு. சில நாட்களுக்குப் பின் அவன் தாய் மரித்தாள். தாயின் பாடல் ஒலியும் மறைந்து போனது. அன்பற்று கடுமையாய் நடத்திய தன் தகப்பனின் செயலைப் பொறுக்க முடியாமல், அவன் தன் உடைமைகளையும் தன் தாயின் பொக்கிஷமான வேத புத்தகத்தையும் எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டு பட்டணத்திற்கு ஓடிப்போனான். அங்கு தீய நண்பர்களோடு பழகி, தன் வாழ்க்கையையும் உடலையும் கெடுத்து வியாதிப்பட்டான்.

ஒரு பொது விடுதியில் மரண அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த அவனைச் சந்திக்க, மிஷினரி ஒருவர் வந்தார். ஆண்டவரின் அன்பைப்பற்றி அவர் பலமுறை எடுத்துக்கூறியும், அவன் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டான். இம்முயற்சியில் தோல்வியுற்று மனமுடைந்த மிஷினரி, மரிக்கும் அந்த

வாலிபனை விட்டு சற்றே விலகி, ஜன்னலருகே சென்று, இப்பாடலை சோர்வுடன் மெல்லிய குரலில் பாட ஆரம்பித்தார். "இது என் தாய் விரும்பிப் பாடும் பாட்டல்லவா?" என்று எண்ணிய அவன் மனக்கண்கள் முன், தாயின் அன்பும், அவளது ஜெபங்களும், பக்தி நிறைந்த வாழ்க்கையும் தோன்றின. 'என் தந்தையின் கொடூர நடத்தையால் நான் வீட்டைவிட்டு வெளியேறின போதெல்லாம் என்னை அன்போடு தடுத்தது, என் தாயின் இந்தப் பாடல்தானே? எத்தனை ஆண்டுகள் இதை மறந்துபோனேன்?" என்று கதறினான்.

அந்நிலையில் தாயின் அன்புக்கும் மேலான இயேசுவின் அன்பை மிஷினரி மீண்டும் அவனுக்கு எடுத்து உரைத்தார். அவன் அந்நேரமே இயேசுவைத் தன் சொந்த ரட்சகராக ஏற்றுக் கொண்டு, அவருடைய சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பெற்று மரித்தான். அமைதியாக விளங்கிய அவன் முகத்தை நோக்கிய வண்ணம் மிஷினரி கூறினார்.. "அந்தத் தாயின் பாடல்! தூர இடங்களில் அலைந்து திரிந்த அவளது மகனைத் தம்மிடம் சேர்த்துக்கொள்ள, ஆண்டவர் இப்பாடலையல்லவா உபயோகித்தார்."

இந்த அருமையான பாடலை எழுதியவர் யாரென்று தெரியவில்லை. "F.B.P" என்ற கையெழுத்தை மட்டும் விட்டுச் இப்பாடலை எழுதியவர் 16 அல்லது 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த கத்தோலிக்கப் பாதிரியாராக இருக்கக் கூடுமெனக் கருதப்படுகிறது.

பரலோகத்தைப் பற்றி, நானூறு வார்த்தைகளடங்கிய கட்டுரையாக இது முதலில் உருவெடுத்தது. வெளிப்படுத்தின விசேஷம் 21ம் அதிகாரத்தை மையமாகக் கொண்டு, ஆசிரியரின் உணர்வு மிக்க படைப்பாக இப்பாடல் உருவானது. முதலில் அநேக எழுத்துப் பிழைகளுடன் 26 சரணங்களைக் கொண்டிருந்த இப்பாடலில் 7 சரணங்களே இப்போது உபயோகத்திலுள்ளன. இப்பாடலின் மூலம் ஆவிக்குரிய ஆசீர்வாதம் பெற்றவர் பலர்.

இந்நாட்களில் மரித்தோர் வீடுகளிலும் மற்றும் அடக்க ஆராதனைகளிலும் மட்டுமே இப்பாடல் பாடப்படுகிறது. தன் மரணத்தையோ, ஆண்டவரின் இரண்டாம் வருகையையோ சந்திக்க ஆயத்தமில்லாத, பல கிறிஸ்தவ மக்களுக்கு மரண பயத்தையும், திகிலையும் ஊட்டும் சாவுப்பாடலாக இது மாறியிருப்பது வேதனைக்குரிய காரியம். ஆனால் பரலோகத்தை அழகாகச் சித்தரிக்கும் இப்பாடல் இரட்சிப்பின் அனுபவம் பெற்றவர்களுக்கு, நித்திய வாழ்வின் நம்பிக்கையூட்டுவதாக விளங்குகிறது.



## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – மார்ச் 2025

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 2 | ஞாயிறு | 11.00 pm – 1.00 pm | உபவாச ஜெபம் |
| | | 2.00 pm – 3.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 4 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 5 | புதன் | 8.00 pm – 10.00 pm | சாம்பல் புதன் கிழமை - தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 7 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து மற்றும் பெண்கள் சிறப்பு ஆராதனை - St.Andrew's church |
| 9 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – முசாபா |
| 11 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 14 | வெள்ளி | 7.30 pm – 9.30 pm | தூய ஆராதனை & கன்வென்ஷன் - CSI Malayalam church |
| 16 | ஞாயிறு | 9.00 am – 4.00 pm | Retreat |
| 18 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 21 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 23 | ஞாயிறு | 8.00 pm – 9.00 pm | வாலிபர் கூடுகை |
| 25 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 28 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 31 | ஞாயிறு | 11.45 pm – 12.00am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

# ஆராதனை பாடல்கள் – மார்ச் 2025



| | |
|---|---|
| **05-03-25** | |
| பாமாலை – 375 | நீரோடையை மான் வாஞ்சித்து |
| பாமாலை – 90 | நாற்பது நாள் ராப் பகல் |
| கீர்த்தனை – 127 & 122 | குணப்படு பாவி தேவ<br>வேறு ஜென்மம் வேணும் |
| பாமாலை – 88 | இந்த அருள் காலத்தில் |
| **07-03-25** | |
| பாமாலை – 1 | ஆத்மமே உன் ஆண்டவரின் |
| பாமாலை – 10 | போற்றிடு ஆன்மமே, சிஷ்டி |
| கீர்த்தனை – 266 & 185 | ஆத்துமா கர்த்தரை துதிக்கின்றதே<br>இயேசு நேசிக்கிறார் |
| பாமாலை – 25 | கர்த்தாவே, இப்போ உம்மைத் |
| **14-03-25** | |
| பாமாலை – 21 | சேனையின் கர்த்தா |
| பாமாலை – 298 | ஆராய்ந்து பாரும் கர்த்தரே |
| கீர்த்தனை – 102 & 153 | தீய மனதை மாற்ற வாரும்<br>இயேசுவே, கிருபாசனப்பதியே |
| பாமாலை – 8 | தந்தாய் உம்மைத் துதித்தே |
| **21-03-25** | |
| பாமாலை – 18 | எங்கும் நிறைந்த தெய்வமே |
| பாமாலை – 207 | கர்த்தாவின் தாசரே |
| கீர்த்தனை – 224 & 226 | தாசரே இத்தாரணியை அன்பாய்<br>ஆத்தும ஆதாயம் செய்குவோமே |
| பாமாலை – 38 | நீர் தந்த நாளும் ஓய்ந்ததே |
| **28-03-25** | |
| பாமாலை – 5 | எல்லாம் சிஷ்டித்த நமது |
| பாமாலை – 367 | ஆண்டவா பிரசன்னமாகி |
| கீர்த்தனை – 203 & 208 | வாரா வினை வந்தாலும்<br>ஏற்றுக்கொண்டருளுமே, தேவா |
| கீர்த்தனை – 317 | அனுக்ரக வார்த்தையோடே |

## திருமறை பாட ஒழுங்குகள் – மார்ச் 2025

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 05-03-25 | சாம்பல் புதன்கிழமை | எரேமியா 7:1-7 | பிலிப்பியர் 2:1-11 | மாற்கு 8:31-38 | 102 |
| 07-03-25 | திருப்பணியில் பெண்கள் | நியாயா. 4:1-16 | பிலிப்பியர் 4:1-7 | யோவான் 4:4-14 | - |
| 14-03-25 | பாவத்திலிருந்து விடுதலை | 2 சாமு. 12:1-14 | அப். 8:9-25 | மாற்கு 2:1-24 | 32 |
| 21-03-25 | துன்புறுவோருடன் இணைந்து கொள்வோம் | எஸ்தர் 4:1-17 | அப். 15:12-21 | மாற்கு 1:40-45 | - |
| 28-03-25 | எல்லைகளை கடந்த விசுவாசம் | ஏசாயா 44:28-45:8 | அப். 10:24-33 | லூக்கா 7:1-10 | 25 |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 04-03-25 | நீதிமொழிகள் | 3:19-35 | Tourist Club |
| 11-03-25 | நீதிமொழிகள் | 4: 1-13 | Al Wadha |
| 18-03-25 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 25-03-25 | நீதிமொழிகள் | 4: 14-27 | Hamdan |

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



# BIRTHDAY - MARCH




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mr. | Radja Thomas |
| 2 | Ms. | Smitha. J |
| 3 | Mrs. | Jebakani Jeya. S |
| 4 | Mrs. | Girija Virgin |
| 4 | Ms. | Giana Elin |
| 4 | Ms. | Liana Erin |
| 5 | Baby | Leona Juliet. J. B |
| 5 | Mr. | Raja Singh |
| 8 | Ms. | Ielin Daisy Devashania |
| 9 | Ms. | Miraclin Joy |
| 9 | Miss. | Ashika Y |
| 10 | Baby | Aaron David |
| 11 | Master | Jeffery Samvel |
| 12 | Baby. | Janey Jessica Yamuna Titus |
| 12 | Mr. | Wilfred Sumad San K |
| 12 | Mrs. | Jasmine Sobha |
| 12 | Ms. | Efrona |
| 12 | Mr. | Sunil Manuel Augustine |
| 13 | Mrs. | Shobana Milton |
| 13 | Mrs. | Christella |
| 13 | Mrs. | Steffi Prince |
| 14 | Ms. | Kerrylin Jinny J |
| 16 | Baby | Jayden |
| 17 | Mr. | Srinivasan Jayaprakasam |
| 18 | Mr. | Danial Abraham |
| 19 | Ms. | Sherly Rajam |
| 19 | Mr. | Eugene Noble |

## BIRTHDAY - MARCH




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 20 | Mrs. | Margaret Gladina S. |
| 20 | Mr. | Kevin Jaffe Kumar |
| 21 | Master | Nethan |
| 22 | Miss. | Jesse Grace |
| 23 | Mr. | Joshua Amos Sam |
| 23 | Mrs. | Valentine Isabel Sharmila |
| 24 | Mrs. | Lincy Godwin |
| 24 | Ms. | Keren Tessa |
| 25 | Mr. | Selva Shaji |
| 25 | Mr. | Ajin Kumar K C |
| 25 | Mrs. | Pinky Ebulin |
| 25 | Mrs. | Teressa Jeyakumar |
| 25 | Mrs. | Shyni D S |
| 26 | Mr. | John Surya A |
| 26 | Mrs. | Yamuna Agastian |
| 27 | Mr. | Vethakkan Pandian |
| 30 | Mrs. | Jasmine Mohan |
| 31 | Mr. | Joshua Jimson |
| 31 | Mr. | Easter Rajesh |

## WEDDING DAY - MARCH




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 3 | Mr.& Mrs | Samuel Prakashraj. R |
| 5 | Mr.& Mrs | Yesudhas M |
| 8 | Mr.& Mrs | M. Periyannan |







## Family & Couples Retreat - 9th Feb 2025







# Medical Mission Special Service - 14th Feb 2025

Medical Mission Special Service - 14th Feb 2025





# LENT

PRAYER • FASTING • ALMSGIVING

## Way of the Cross



## Journeying with the Lord